*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
***தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்***
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
*பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018*
*UGC Approved Journal (64089), © Author*

# தமிழகத்தில் அண்மைக்கால அகழாய்வுகள்

**முனைவர் பா.தமிழரசி**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி

## முன்னுரை

*தமிழர்களைப் பற்றி இலக்கியங்கள் கூறும் போது ‘கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி’ என்று குறிப்பிடுகின்றன. அத்தகைய மூத்தகுடி இந்தியாவில் முதன்முதவில் எந்தப் பகுதியில் தோன்றியது? அதன் உண்மை வரலாறு என்ன? போன்ற கேள்விகளுக்கு அகழாய்வுச் சான்றுகளின் முடிவுகளுடன் வரலாற்று ஆய்வாளர்களும் தொல்லியல் வல்லுநர்களும் கருத்துகள் தெரிவித்துள்ளனர்.*

‘தமிழக வரலாற்றை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும் என்றால், தமிழகத்தின் தொன்மை வாய்ந்த பகுதிகளை அகழாய்வு செய்து அதன் மூலம் கிடைக்கும் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் கூறப்பட்டால் அவை வரலாற்றுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும்’ என்பார் கே.கே.பிள்ளை அவர்கள்.

**கீழடி அகழாய்வு**

குந்தவை பிராட்டி ஆண்ட **சதுர்வேதிமங்கலம் பகுதிதான் ‘கீழடி’** என அழைக்கப்படுகிறது. மத்தியஅரசின் தொல்லியல் துறையின் கீழ் 2014 முதல் 2017 வரை ஆய்வுகள் நடைபெற்றன.

**அமைவிடம் :**

தற்போதைய கீழடி ஊரிலிருந்து கிழக்கே ஒரு கி.மீ. தொலைவில், மணலூர் கண்மாயின் மேற்கூரையில் பள்ளி சந்தை திடல் என்றழைக்கப்படும் தொல்லியல் மேடொன்று உள்ளது. தரையிலிருந்து சுமார் இரண்டரை மீட்டர் உயர்ந்து காணப்படும் இம் மேடு தற்பொழுது தென்னந்தோப்பாக பயன்பாட்டில் உள்ளது. முன்பு நிலத்தினை உழும் பொழுது பலவகையான மட்கலன்கள் தொல்பொருட்கள், பெரிய அளவிலான சுட்ட செங்கற்கள் மற்றும் கூரை ஓடுகள் இங்கு கிடைக்கப் பெற்றுள்ளன. இம் மேட்டின் கிழக்கே சுமார் 2 கி.மீ. தொலைவில் கொந்தகை என்ற ஊருக்கு செல்லும் பாதையில் இதனோடு தொடர்புடைய ஈக்காடும் அமைந்துள்ளது. இங்கு பல ஈமத்தாழிகள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.

**தொடக்கம் :**

கீழடி மற்றும் கொந்தகை உள்ளடக்கிய பகுதிகள் பிற்காலப் பாண்டியர் காலத்தில் **‘குந்திதேவி சதுர் வேதி மங்கலம்’** என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளது. கீழடியுள்ள அர்ஜீனேஸ்வரர் கோயிலில் காணப்படும் 12 மற்றும் 13ஆம் நூற்றாண்டு கல்வெட்டுக்களில், ‘வேலூர் குளக்கீழ்’ என்ற நாட்டுபிரிவின் கீழ் அமைந்திருந்ததாக குறிக்கப்படுகிறது.

**தொல்லியல் எச்சங்கள் :**

கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டைச் சார்ந்த

தொல்லியல் எச்சங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் பெரிய அளவிலான சுட்ட செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட கட்டிடப் பகுதிகள், பெரிய கூரை ஓடுகள், முத்துமணிகள், கண்ணாடி மற்றும் பல்வகையான கல்மணிகள், சங்கு வளையல்கள், சுடுமண் பொம்மைகள், அம்மி, குழவி, இரும்பு, செப்புப் பொருட்கள் போன்றவை அடங்கும்.

ரோமானிய நாட்டுடன் இவ்விடம் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததற்கு சான்றளிக்கும் வகையில், வணிகர்களால் கொண்டு வரப்பட்ட ரூலட் மற்றும் அரிட்டைன் வகை மண்பாண்ட துண்டுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. மேலும் வரலாற்று தொடக்க காலத்தைச் சேர்ந்த கருப்பு சிவப்பு மண்பாண்டவகை, வெள்ளை வண்ணம் பூசப்பட்ட கருப்பு சிவப்பு மண்பாண்ட வகை மற்றும் ரசட் கலவை பூசப்பட்ட மண்பாண்ட வகையும் அகழாய்வில் கிடைத்துள்ளன. இது தவிர்த்து தனிநபர்களின் பெயருடன் தமிழ் பிராமி எழுத்துப்பொறிப்பு கொண்ட மண்பாண்ட ஓடுகள் இங்கு கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

102 குழிகள் அமைத்து ஆய்வு செய்ததில் உறை கிணறுகள், சுட்ட செங்கல் சுவர், சுடுமண் கூரை ஓடுகள், தொழிற்சாலைக்குப் பயன்படும் இரண்டடுக்கு வெப்ப உலைகள் உள்ளிட்டவற்றுடன் 3000க்கும் அதிகமான தொல் பொருட்களும் கிடைத்தன.

வெறும் 50 செண்ட் அளவில் தோண்டிப் பார்த்ததில் வெளிப்பட்ட பழந்தமிழரின் வைகைக் கரையில் வாழ்ந்த மனிதரின் நாகரிகம் இன்னும் உள்ள 150 ஏக்கர் நிலப்பரப்பிலும் ஆய்வு செய்தால் ஒரு மிகப் பெரிய தொல் நகரம் வெளிப்பட வாய்ப்புள்ளது.

**கண்டெடுக்கப்பட்டவை :**

கீழடி ஆய்வில் கண்டெடுத்த கட்டிடங்கள் தொழிற்சாலை அமைப்பு கட்டிடங்களாக இருக்கும் என்று கருதப்படுகிறது. வாய்க்கால் அமைப்பு, நீர் தொட்டிகள், மண் கூம்புகள், அணிகலன்கள், தந்தத்தால் ஆன கருவிகள், கருப்பு, சிவப்பு மண் பானைகள் முதலியன கண்டறியப்பட்டுள்ளன.

மேலும் மண் ஓடுகளில் எழுத்துக்களின் முன்னோடியான குறியீடுகள் பொறிக்கப்பட்டுள்ளன. தமிழி எழுத்துக்களின் வடிவம் காணப்படுகின்றன.

மதுரை அருகே உள்ள கீழடியில் 2200 ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு பழங்கால நகரத்தின் பகுதிகளை அகழ்வராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். இந்த நகரம் சிவகங்கை மாவட்டத்திற்கு உட்பட்டதாகும்.

**அழகன் குளம்**

ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது அழகன் குளம் கிராமம். ராமநாதபுரத்திலிருந்து கிழக்கே 17கி.மீ தொலைவில் வைகை ஆறு கடலில் கலக்கும் இடத்தில் அமைந்துள்ளது. இந்த கிராமம் சங்க காலத்தில் புகழ்பெற்ற வணிகத் தலமாக விளங்கியுள்ளது என்பது தெரியவருகிறது.

1986-87 ஆம் ஆண்டுகளில் தொடங்கிய இந்தப்பணி, ஏழு பருவங்களாக நடைபெற்றுள்ளது. இதில் ஏராளமான தொல்பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பண்டைய தமிழ் மக்கள் பயன்படுத்திய ஆபரணங்களான சங்கு வளையல்கள், அரிய கல் மணிகள் சுடுமண்ணால் செய்யப்பட்ட மணிகள், கண்ணாடியாலான பொருள்கள், இரும்பிலான பொருள்கள், நாணயங்கள் மத்திய தரைக்கடல் நாடுகளோடு கொண்டிருந்த வணிகத் தொடர்பை வெளிப்படுத்தும் அரிய மண்பாண்டங்கள், நாணயங்கள், பல்வேறு உருவம் பதித்த மண்பாண்டங்கள் தமிழ் பிராமி எழுத்து பொறிப்பு பெற்ற மண்பாண்டங்கள் ஆகியவை இதிலடங்கும்.

**கொடுமணல் :**

**அமைவிடம்**

பண்டைய கொங்கு நாட்டில் இன்றைய ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டத்தில் நொய்யல் ஆற்றின் வடகரையில் கொடுமணல் அமைந்துள்ளது. இவ்வூர் சென்னி மலையிலிருந்து ஊத்துக்குளி செல்லும் சாலையில் 18 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

**‘‘கொடுமணம்பட்ட வினை மாண் அருங்கலம்**

பந்தர் பயந்த பலர் புகழ் முத்தம்''

(பதிற்றுப்பத்து 74:5-6)

சங்க இலக்கியக் குறிப்புகளிலிருந்து இப்பகுதி சங்க காலத்தில் பல்வேறு வெளிநாட்டினர் வந்து சென்ற சிறப்புப் பெற்ற பன்னாட்டு வணிகத் தலமாக இருந்தது என்பதை அறிய முடிகிறது. யவனர் என இலக்கியங்களில் குறிப்பிடப்படும் கிரேக்கம், ரோம், எகிப்து நாடுகளைச் சேர்ந்த மக்கள் இவ்வூருக்கு வந்து சென்றுள்ளனர். சங்ககாலத்தில் 'கொடுமணம்' என்று அழைக்கப்பட்ட இவ்வூர் இன்று கொடுமணல் என வழங்கி வருகிறது.

**அகழாய்வுச் சிறப்பு :**

மக்கள் வாழ்ந்த பகுதி, ஈமக்குழி என இரண்டு வகையான இடங்களிலும் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இம்மக்கள் இரும்புக் காலத்தை சேர்ந்தவர்களாயினும் பெரிய கற்பலகைகள் மற்றும் பெரிய கற்களைப் பெருமளவில் பயன்படுத்தியமையால் இவர்களைத் தொல்லியலாளர்கள் பெருங்கற்படை பண்பாட்டுக்குரிய மக்கள் எனக் கருதுகின்றனர்.

இந்த அகழாய்வில் இரும்புக் கருவிகளான கத்தி, வாள், ஈட்டி, கேடயம், மணிகள், அங்கவடி (Horse - Stirrups) என ஏராளமாகக் கிடைத்துள்ளன. குதிரையின் அங்கவடி கிடைத்துள்ளமை குதிரை அக்கால வணிகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்ததை வெளிப்படுத்துகிறது.

கொடுமணல் அகழாய்வில் 400க்கும் மேற்பட்ட மண்கலச் சில்லுகளில் எழுத்துப் பொறிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கொடுமணல் அகழாய்வில் மட்டுமே என்பது பெருமைக்குரியதாகும். மண்கலங்களில் காணப்படும் பெயர்கள் பல (எ.கா: ஆதன், சாத்தன், கோன், அந்தை, மகன்) சங்க இலக்கியப் பெயர்களுடன் ஒத்ததாகக் காணப்படுகின்றன. அக்காலத் தமிழ்ச்சமூகம் எழுத்தறிவு பெற்ற சமூகமாக விளங்குகின்றன எனில் மிகையன்று. அக்காலத் தமிழ்ப் பண்பாட்டோடு பிராகிருத மொழி பேசிய மக்களின் கலப்பு இருந்ததற்கான பல சான்றுகளும் (**எ.கா : நிகம, விஸாகீ**) பானை எழுத்துப் பொறிப்புகளின் வாயிலாக வெளிப்படுவதைக் காண முடிகிறது. இது இப்பகுதியினுடன் பிறநாடுகளைச் சேர்ந்தவர்கள் வணிக நிமித்தமாக கலந்துள்ளனர் என்பதைக் காட்டுகிறது.

**நிகழ்த்திய ஆய்வுகள் :**

1961 – மத்திய அரசு தொல்லியல் துறை

1980, 1998, 1999 – தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

1985, 1986, 1989, 1990 – தமிழ்ப் பல்கலைக்கழகம்

2012, 2013 – செம்மொழித் தமிழாய்வு மையம் போன்றவை கொடுமணல் பகுதியில் நிகழ்த்திய ஆய்வுகள் ஆகும்.

**கிடைத்தவை :**

- பெண்களுக்கான நெடுநிலை நடுகல்
- சங்கு, கல்மணிகள்
- பச்சை கற்களால் ஆன மணிகள்
- அடுப்புக் கற்கள்
- மணிகளால் செய்த புலிவடிவம்
- பருத்தி துணி நூற்கும் தக்களி
- தங்கத்தால் ஆன அணிகலன்கள்
- இரும்பால் செய்த ஆயுதங்கள்

**பட்டரை பெரும்புதூர் அகழாய்வு: (2016)**

இவ்வூர் திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் அகழாய்வு பணி மேற்கொள்ளப்பட்டது. இந்தப்பகுதி முழுவதும் சாம்பல் நிறமண் தான் காணப்படுகின்றன. 21 வகையான உறை கிணறுகள் கண்டறியப்பட்டுள்ளன. குறியீடு உள்ள பானை பாத்திரம், புகை போக்கும் கண் பாத்திரம் முதலியவை அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

**பொருந்தல் அகழாய்வு : (2010)**

தமிழகத்தில் பழனி அருகே உள்ள பொருந்தல் என்ற இடத்தில் நடந்த அகழாய்வின் போது கிடைத்த மட்பாண்டங்களில் இருந்த இரு நெல் மாதிரிகள் அமெரிக்காவில் உள்ள பீட்டா ஆய்வு நிலையத்தில், அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அவைகளின் காலம் கி.மு. 490, கி.மு. 450 எனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு நெல் மாதிரிகளுமே, பொருந்தல் அகழாய்வில் கிடைத்த இரு வெவ்வேறு மட்பாண்டங்களிலிருந்து எடுக்கப் பட்டவையாகும். இந்த மட்பாண்டங்களில் தமிழி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.மு. 5 ஆம் நூற்றாண்டு என்கின்றனர்.

**அகழாய்வு தொல் பொருட்கள் :**

பொருந்தல் அகழ்வாய்வில் மட்கலக் கிண்ணங்கள், குடுவைகள், தட்டுகள், குவளைகள், மட்பாண்டத்தாங்கிகள் போன்றவை கிடைத்துள்ளன.

**முடிவுகள்** :

- தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் மூலம் சங்ககால ஊர்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- தமிழ் எழுத்தின் தொன்மை, எழுத்து உருவாக்கம் அறியப்பட்டுள்ளன.
- தமிழரின் அரசியல், வாணிகம், பொருளாதாரம், சமூகம், நாகரிகம் போன்றவைப் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது.
- தமிழ் மண்ணில் அண்மைக்காலமாய் கிடைத்து வரும் பல்வேறு கற்கருவிகள், பழந்தமிழ் எழுத்துக்கள் மற்றும் தொல்லியல் அகழாய்வு பொருட்களால் இந்தியாவின் ஒட்டு மொத்த வரலாற்றையும் மறுஆய்விற்கு உட்படுத்தும் நிலை உருவாகி இருக்கிறது. சமஸ்கிருத மொழியின் பின்னணியிலிருந்து ஆய்வு நடத்திய ஆய்வாளர்கள் அனைவரும் இப்போது தமிழின் பழமையிலிருந்து தங்கள் மொழியில், பண்பாட்டியல், சமூகவியல் ஆய்வுகளை நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அகழாய்வு மேற்கொண்டால் இந்திய வரலாறு கோணலாகும் என்பதை நன்கு உணர்ந்த இந்திய அரசு எக்காலத்திலும் நம் சிறப்பை எடுத்துரைக்க உதவாமல் போனாலும் உண்மை வெளியாக வேண்டிய சூழ்நிலை விரைவில் உருவாகும்.